**DEPOSITION OF WITNESSES**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**
**C.C. No: 22/16**
**Deposition of Witnesses for PW4**

| Name | : | திரு.பெரியசாமி | Caste: |
|---|---|---|---|
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **07.06.2024**

## முதல் விசாரணை

நான் தற்போது காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 16.10.2015ம் தேதி நான் ராமநாதபுரத்தில் Q பிரிவு குற்ற புலனாய்வு துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது மாலை 7 மணிக்கு Q பிரிவு குற்ற புலனாய்வு துறை காவல் ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நான், ஆய்வாளர், உதவி ஆய்வாளர் திரு.கணேசமூர்த்தி, த.கா.தில்லைராஜன், இளங்கோ, செந்தில்குமார் மற்றும் மு.நி.கா. தெட்சிணாமூர்த்தி மற்றும் ஜேடீ-ஊஐனு ராமநாதபுரம் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் திரு.மாரிமுத்து, தலைமை காவலர்கள் ராஜாராம் ஆகியோருடன் ராமநாதபுரத்தில் இருந்து 7.45 மணிக்கு புறப்பட்டு எஸ்.பி.பட்டிணம் மீமிசல் செல்லும் வழியில் எஸ்.பி.பட்டிணம் நாகூர் கனி என்பவருக்கு சொந்தமான தென்னை தோப்பிற்கு அப்போது எஸ்.பி. பட்டிணம் விஏஓ திரு.சிதம்பரம், கிராம உதவியாளர் காளீஸ்வரன், ஆகியோர் தகவலாளி அடையாளம் காட்டிய நபர்களான 1. அல்லா பிச்சை, பள்ளிவாசல்தெரு, ராமேஸ்வரம், 2. கலந்தர் அலி, நடுத்தெரு, எஸ்.பி.பட்டிணம். பிடித்தனர். அவர்களை சோதனையிடுவதற்கான ரகசிய பொருளான கஞ்சா வைத்திருந்ததாக சோதனையிடுவதற்காக அருகிலுள்ள நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பெற்ற அதிகாரியின் முன்பாக தான் சோதனையிட வேண்டும் என்று சம்மத கடிதம் கொடுக்க அதில் நானும், விஏஓ, தலையாரி ஆகியோர் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.2 சோதனை சம்மத கடித்தத்தில் 4வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். சோதனை சமம்த கடிதத்தில் தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறியதன் அடிப்படையில், ஆய்வாளர் சோதனை செய்ததில் அவரிடமிருந்து 3 மூட்டைகளில் கஞ்சா இருந்தது. நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்க்க அதில் முறையே 45 கி, 45 கி, 44 கி இருந்தது. மொத்தம் 134 கி இருந்தது. அந்த 3 மூட்டைகளுக்கும் ஆய்வாளர் P1 முதல் P3 என குறியீடு செய்தார். ஒவ்வொரு மூட்டைகளிலிருந்து சுமார் 50 கிராம் எடையுள்ள மூன்று கஞ்சா சாம்பில்கள் எடுத்து பரிசோதனைக்காக காக்கி கவரில் போட்டு, விவர லேபில் ஒட்டியும், அதில் விஏஓ, தலையாரியும், எதிரிகளும் கையெழுத்து செய்தனர். அந்த 3 சாம்பில்களுக்கு S1 முதல் S3 என குறியீடு செய்தார். ஆய்வாளர் அத்தாட்சியில் கையெழுத்து செய்து 2வது எதிரியான கலந்தர் அலியிடமிருந்து 1 சோனி கம்பெனி செல்போன் ஒன்றும், 1 நோக்கியா செல்போன் ஒன்று, ரூ.6300/- பணம் ஆகியவை கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் விஏஓ, தலையாரியும், ஆய்வாளர், நான், NIB-CID போலீசார் மற்றும் எதிரிகளும் கையெழுத்து செய்தனர். என்னிடம் காட்டப்படும்

கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.3ல் உள்ள சாட்சி கையொப்பத்தில் உள்ள 4வது கையொப்பம் என்னுடையது தான். ஆய்வாளர் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார். பின்பு NIB-CID ஆய்வாளர் அவர்கள் இரவு 12.40 மணியளவில் 1வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். 1.30 மணிக்கு 2வது எதிரி கலந்தர் அலியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதில் சாட்சிகளாக விஏஓ, தலையாரி ஆகியோர் கையொப்பம் செய்தார்கள். பின்பு 5.00 மணிக்கு NIB-CID அலுவலகம் சென்று வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**(எதிரி கலந்தர் அலி ஆஜர், ஆனால் எதிரி வழக்கறிஞர் ஆஜரில்லை. எதிரிக்காக மற்றொரு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணைக்காக கால அவகாசம் கோரினார். தகுந்த வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. )**

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.